RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22330

# தோல் புதினத்தில் பொதுவுடைமைச் சிந்தனைகள்

ப. யுவராணி [அ, *] சா. சிவமணி [அ]

[அ] தமிழ்த்துறை, சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு-638004, தமிழ்நாடு, இந்தியா.

# Marxist Thoughts in ‘Thol’ Novel

**P. Yuvarani [a, *], S. Sivamani [a]**

[a] Department of Tamil, Chikkaiah Naicker College, Erode-638004, Tamil Nadu, India

* Corresponding Author: tamil.yuvarani.p@gmail.com

Received: 01-04-2022
Revised: 18-06-2022
Accepted: 23-06-2022
Published: 27-07-2022

Check for updates

**ABSTRACT**

The literary form of the novel is the epic form of the new age. Literary forms and their patterns change according to the change of society. Due to this some literary forms will disappear and some of them will always appear in that form. The new literary form that emerged about two centuries ago is still reviving today. Because like other literary forms it is on depicting a part of a man or event. It fully portrays the change and movement of a society and is violent. The idea of Marxism which was subjected to such a mic and created various adjustments between the class distinctions of working class and employer worldwide, brought about a global change. Not only this but it gave a new evolution to the literary development. It was widely talked about by the writers. Many novels have been created in the world of Tamil fiction based on the principle of Marxism. This article sets out to explore the thol novel of Mr. Daniel Selvaraj, who appeared in the series from a public perspective.

**Keywords:** Thol, Pothuvudaimai, Employer, Daniel Selvaraj

## முன்னுரை

தங்கள் உழைப்பின் பலனை அனுபவிக்க அனைவருக்கும் உரிமையுண்டு. ஆனால் முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் அது தடைபடுகிறது. இதனால் சமூகத்தில், உரிமை இல்லாத தொழிலாளர்கள் மற்றும் வேலை செய்யாத உரிமையாளர்கள் என இரு வேறுபட்ட வர்க்கங்கள் உருவாகின்றன. இது பல்வேறு சூழ்நிலை மாற்றங்களைச் சமூகத்தில் ஏற்படுத்துகிறது.

பொருளாக்கத்தில் ஈடுபடும் பாட்டாளி வர்க்கத்திற்கும் தனி உடைமை வழியாக அந்தப் பொருளை எடுத்துக் கொள்ளும் முதலாளி வர்க்கத்திற்கும் இடையே முரண்கள் எழுகின்றன. தம் உழைப்பால் உருவாகிய உபரிப்பொருள் தம்மிடம் சேராமல் அயன்மைப்பட்டு முதலாளிகளிடம் சேரும் முரண்பாடு பாட்டாளி வர்க்கத்திற்குத் தெளிவாகும் போது சமூகப் போராட்டம் கிளைத்தெழுகின்றது; சமூகப் புரட்சியாகிறது. இஃது இறுதியாக ஒவ்வொருவரின் திறனுக்கேற்ற வகையில் உழைப்பைப் பெற்று அதன்மூலம் கிடைக்கும் பொது ஈட்டத்தை ஒவ்வொருவருக்கும் அவரவர் தேவைக்கேற்பப் பகிர்ந்து வழங்கும் பொதுவுடைமைப் பாதைக்கு வித்திடுகிறது. சமூகப் பொருளியல் பகுப்பாய்வு முறையான இப்பொதுவுடைமைப் பாதை, வர்க்க உறவுகளையும் சமூகப் போராட்டத்தையும் வரலாற்றுப் பொருள் முதல் வாதக் கண்ணோட்டத்தில் பகுப்பாய்வு செய்கிறது. பொருளியல், அரசியல், மெய்யியல் கோட்பாடுகளைத் தன்னகத்தே கொண்டு புரட்சி மூலம் உலகை மாற்றியமைப்பது பற்றிப் பேசுகிறது. பல்வேறு போராட்டங்களுக்கும் அடிப்படைக் கருத்தியல் ஆயுதமாக இது பொதுவுடைமைச் சிந்தனையாளர்களால் கருதப்படுகிறது.

“வரலாறு, மதம், மெய்யியல், அறிவியல், சமூகம், கலை, இலக்கியம் முதலிய அனைத்தையும் விளக்கக்கூடியதாக அமைவது மார்க்சியம் ஆகும். மார்க்சியக் கோட்பாடு என்பது, இவ்வுலகில் யாருமே முதலாளிகள் இல்லை; யாருமே தொழிலாளிகள் இல்லை என்னும் சமத்துவ பாதையை உணர்த்துவதே ஆகும்” (Agniputhiran, 2009).

“மார்க்சியமானது, இலக்கியத்தைத் தன்னளவில் முழுமை கொண்ட ஒன்றாகக் கருதுவது இல்லை. மாறாக அது சமுதாயத்தின் பல்வேறு அம்சங்களான அரசியல், சமயம், சட்டம், சாதி போன்றவற்றோடு செயல்பாட்டு உறவைக் கொண்டுள்ளது. அதனால் சமுதாய முழுமையில் ஓர் உறுப்பான இலக்கியத்தின் கூறுகளில் அதன் பண்பும் வளர்ச்சியும் தங்கி, தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.” இலக்கியத்தோடு இத்தகைய தொடர்பினைக் கொண்ட மார்க்சியமானது ஆதிப்பொதுவுடைமைச் சமூகம், அடிமைச்சமூகம், நிலவுடைமைச் சமூகம், முதலாளித்துவ சமூகம், சமத்துவ சமூகம் என ஐவகைச் சமூகங்களைக் காட்சிப்படுத்தி அவற்றில் எழும் சிக்கல்களையும் தீர்வுகளையும் கூறும் தன்மை கொண்டதாகையால் இச்சமூகங்கள் பற்றிய சிந்தனைகள் தமிழ் இலக்கியங்களில் வெகுவாக இடம்பெற்றன. பொதுவுடைமைக் கொள்கையைப் பின்பற்றி, தொழிலாளர் போராட்டம், வறுமை, வர்க்கப் பிரச்சினை, புரட்சி, சமூகமாற்றம், ஆகியவற்றை முதன்மைப்படுத்திப் பல புதினங்கள் எழுந்தன (Natarajan, 2009).

முதலாளித்துவ சமூகத்தில் இத்தகைய சூழலைப் பின்புலமாகக் கொண்டு சாதி அடிமைத்தனத்தின் கொடுவிலங்குகள் உடைத்து தோல் தொழிற்சாலை உரிமையாளர்களையும், பெருந்தனக்காரர்களையும், மமதை கொண்ட அதிகாரிகளையும் தாண்டி உரிமைகளை வென்றெடுத்துத் தன்மானத்துடன் வாழத் தலைப்பட்ட அடித்தட்டு மக்களின் கதையைச் சொல்லும் புதினமாகத் திரு. டேனியல் செல்வராஜால் படைக்கப்பட்டது தோல் புதினம். அப்புதினத்தில் கூறப்படும் தொழிலாளிகளின் முன்னேற்றத்தில், தோளோடு தோள் கொடுத்து நின்ற பொதுவுடைமை இயக்கமானது அவர்களது இதயத்தில் ஊற்றெடுத்து, குருதியில் கலந்து, வளர்ந்து உரிமையை மீட்டெடுத்த நிலையைப் படிப்படியாக விளக்குதலை இக்கட்டுரை முன்னெடுக்கிறது.

## தொழிலாளர் நிலை

“மனித வாழ்வின் அடித்தளம் அவனின் பொருளாதாரச் செயல்பாடுகள் தான். அந்த அடித்தளத்தின் மீதுதான் சட்டம், அரசியல், மதம், தத்துவம், கலை-இலக்கியம் போன்ற மேற்கட்டுக்கோப்பு உருவாகிறது. அடித்தளம் மாறும்போது இந்த மேற்கட்டுக்கோப்பும் மாறுகிறது. இது மார்க்சியத்தின் அடிப்படைக் கோட்பாடு ஆகும்” (Arunan, 1992).

இந்த அடிப்படையில் பொருளாதாரத்தில் பின்தங்கி இருந்த பாட்டாளி மக்களின் வாழ்வியல் கூறுகள் கட்டுக்கோப்புகளின்றி பல நிலைகளிலும் பின்தங்கி இருந்தன. இதற்குப் பாட்டாளி மக்களின் உழைப்பை உறிஞ்சுவது முதலாளித்துவ சமூகத்தில் இயல்பான ஒன்றாய் இருந்ததும் அதற்குச் சாதி வேறுபாட்டால் விளையும் சமூக இடைவெளி மிக முக்கியமான காரணமாக அமைந்ததுமே அடிப்படை எனக் கூறலாம். தோல் புதினத்தில் உழைக்கும் வர்க்கத்தினரான விளிம்புநிலை மாந்தர்களின் நிலை இதனைப் பட்டவர்த்தனமாக விளக்குகிறது. முதலாளி வர்க்கம் தொழிலாளர்களைத் தங்கள் ஆளுமையின் கீழ் கொண்டுவர அவர்களது வறுமையைத் துருப்புச் சீட்டாக்கிக் கொண்டது. முறி எழுதிக் கொடுத்தல், முன்பணம் பெறுதல் போன்றவை அம்மக்களைக் கொத்தடிமைத்தனத்திற்குள் தள்ளியிருந்தது.

தோல் தொழிற்சாலைகளில் முறி எழுதி பதிவு செய்யப்பட்ட எந்த ஒரு தொழிலாளியும் தோல் தொழிற்சாலை முதலாளிகளின் உடும்புப்பிடியை உதறிவிட்டு வெளியேற முடியாத நிலை இருந்தது. முன்பணமாகப் பெறும் வெள்ளிக் காசுகளை எப்படியாவது சம்பாதித்து முறி எழுதிக் கொடுத்த அடிமைச்சாசனத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டு தங்களது ஊர்களுக்குத் திரும்பி விடலாம் என எண்ணுவதும், உழைப்பதுமான அவர்களின் வாழ்க்கை உரிய கூலி தரப்படாததால் அடிமை வாழ்வாகவே தொடர்ந்தது.

வட்டிப் பணம் என்றும் உழைத்த பணம் என்றும் தொழிலாளிகளின் உழைப்பு முதலாளிகளின் பெட்டிகளுக்குள் பணமாக அடக்கமாயின. தொழிலாளிகளால் வாங்கப்பட்ட முன்பணம் வட்டியும் முதலுமாக இரட்டிப்பாகி அவர்களது உழைப்பை மட்டும் உறிஞ்சிக்கொண்டிருந்தது. சொற்பக் காசுக்காய் உயிரையே கொடுக்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டிருந்தனர். தோல் தொழிற்சாலைகளில் சுண்ணாம்புக் குழியில் வேலை செய்வது பலரது திடகாத்திரமான உடற்கட்டில் பாதியை மென்று விழுங்கி விட்டிருந்தது. நாள் முழுவதும் சுண்ணாம்புக் கலவை கலந்த நீரில் எந்தவிதமான பாதுகாப்புமின்றி நாற்றம் பிடித்த நிணவாடை வீசும் மாட்டுத் தோலையும் ஆட்டுத் தோலையும் போட்டு அலசுவதாலும், மிதித்துச் சவட்டுவதாலும் பாதங்களும், கரங்களின் உட்பகுதியும் வெந்து இரணமாகிக் காய்ந்து போயின. பாதங்களில் விப்பும் விரிவும் ஏற்பட்டு நடப்பதற்கே சிரமம் என்னும் நிலையில் தொழிலாளிகள் இருந்தனர். புதிதாகச் சுண்ணாம்புக் கலவையைக் குழியில் கலக்கிக்கொண்டு, தோல்களை அலசும் போது அம்மக்கள் மூச்சுத்திணறலுக்கு ஆளாகின்றனர். சுண்ணாம்பு இரசாயனத்தின் வேகத்தில் உரோமக்கால்கள் கருகிப் போய் பார்ப்பதற்கு அவலட்சணமாகி அரைமனிதராகிப் போயினர். தோலினை அலசும் குழியில் விவரம் தெரியாமல் இறங்கியவர்களது பாதங்களும், கால்கள் தொடைவரையிலும் சுண்ணாம்புத் தண்ணீரின் வெம்மை தாளாமல் வேக்காட்டில் வெந்து இரணமாகிப் போயின. வேதனை தாளாமல் காய்ச்சல் வந்து அவதிப்பட்டனர். இடுப்புவரை நிறைந்து கிடக்கும் சுண்ணாம்புநீரில் நின்று தோல்களை அலசுவதற்குள் அவர்களது உயிர் போய் வந்தது. ஆடை முழுவதும் சுண்ணாம்பில் ஊறி உடம்பில் சுண்ணாம்புத் தண்ணீர் பட்ட இடமெல்லாம் நமைச்சல் ஏற்பட்டது. பிறகு அது புண்ணாகி கடும் வேதனையைத் தந்தது. “மேஸ்திரியும் ஏஜெண்டுகளும் சும்மா விடமாட்டார்கள். உடம்புக்குச் சௌகரியம் இல்லை என்று ஒரு நாள் கூட ஓய்வு எடுத்துக்கொள்ள முடியாது. கொத்தடிமைத் தனத்திற்கு ஆட்பட்ட அவர்களது வேதனைகளைச் சொல்லிமாளாது” என்று ஆசிரியர் அவர்களது நிலையைக் காட்சிப்படுத்துகிறார் (Selvaraaj, 2013).

உப்புத் தேய்த்துப் பதப்படுத்தி வரும், மாட்டுத் தோலிலும், ஆட்டுத் தோலிலும் நாட்பட்ட புண்ணில் இருந்து வடியும் சீழ் வாடை கலந்த ஊனின் வாடை தாங்காமல் ஓங்கரிப்பதும் வீச்சம் தாங்காமல் வாந்தி எடுப்பதும் அம்மக்களை வாதைக்கு உள்ளாக்கியிருந்தது. ஊன் வடியும் தோல்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி தொழிலாளிகள் தங்கள் தோள்களிலேயே சுமந்து வர வேண்டியிருந்தது. அதற்கான வண்டிகள் எதுவுமில்லை.

தொழிலாளிகளுக்கு முறையான ஊதியம் வழங்கப்படாமையும் பாதுகாப்பற்ற பணிச்சூழலில் பணிபுரிய நிர்பந்திக்கப்பட்டமையும் தேவைக்கு விடுப்பு எடுக்க முடியாத அடிமைத்தனத்திற்கு ஆட்பட்ட தன்மையும் அவர்களை வெகுவாகப் பாதித்ததைப் புதினம் பல இடங்களில் காட்டுகிறது. தங்கள் குடும்பத்திற்காக வேண்டி உடல் உபாதைகளைப் பொறுத்துக் கொண்டு நரக வேதனை மிக்க பணியை அம்மக்கள் செய்தனர். நுகத்தடியில் பூட்டப்பட்ட காளையாக நாளெல்லாம் கோவணத்தோடு செக்குமாடாகச் சுண்ணாம்புக் காளவாயிலில் இருந்து வரும் சுண்ணாம்புக் கட்டிகளைக் கலவையாக்கிப் பக்குவப்படுத்தும் குழியில் அவர்கள் வேலை செய்தனர். நீர்த்தப்படும் சுண்ணாம்பிலிருந்து கிளம்பும் புகையில் சுவாசிக்க முடியாமல் தவித்தனர். சுண்ணாம்பிலிருந்து கிளம்பும் வெக்கையால் உடம்பெல்லாம் வெந்தது. கால் இடறிக் குழியில் விழுந்துவிட்டால் அக்குழியிலேயே தொழிலாளர்கள் நீர்த்துப் போக வேண்டிய அவல நிலையே இருந்தது. வெக்கை நோய், ஈழல் நோய் போன்றவற்றால் மரணம் ஏற்படுவது அங்கு சாதாரணமான ஒன்றாக இருந்தது. பணி செய்யும் இடத்தில் அவர்களது பாதுகாப்புக்கு உத்தரவாதமில்லை. உழைப்புக்கான முறைப்படுத்தப்பட்ட வேலை நேரமும் இல்லை. தோல் தொழிற்சாலைப் பணியினால் உடல் நலம் குன்றி இறந்து போனால் அவர்களது குடும்பத்திற்கு இழப்பீடும் இல்லை.

நகர சுத்தித் தொழிலாளர் நிலையோ இன்னும் மோசமாக இருந்தது. அவர்கள் குவிந்து கிடக்கும் மனித மலக்கழிவைக் கரங்களால் அள்ளி, கூடைகளில் வாரி மலக்கழிவு வண்டிகளில் நைட்சாயில் கிடங்குகளுக்குக் கொண்டு செல்லவேண்டும். சொற்பக்காசுக்காய், சகிக்க முடியாத மனிதக்கழிவின் நாற்றத்தை அவர்கள் உள்வாங்கி உழைக்க வேண்டி இருந்தது. அவர்களுக்குச் சம்பளமாக வழங்கப்படும் காசு போதாது என்பதால் வட்டிக்குக் கடன் பெற்றார்கள். வட்டி செலுத்த முடியாமல் ஈட்டிக்காரர்களுக்குத் தங்களது பெண் பிள்ளைகளை அடமானம் வைத்தனர். நிரந்தரக்கூலி என்பது

அவர்களுக்கு இல்லை. பணிநேரம் வரையறுக்கப்படாத நிலையில் எப்போதும் ஓய்வின்றி அவர்கள் உழைக்க வேண்டியிருந்தது எனவும் அவர்களது உழைப்பால் விளைந்த பயனைப் பெற்று முதலாளிகள் சமுதாயத்தில் மேலும் மேலும் உயர்ந்தனர் எனவும் ஆசிரியர் தொழிலாளர்களது பாடுகளையும் அவர்கள் வஞ்சிக்கப்பட்ட நிலையும் காட்சிப்படுத்துகிறார். இந்த மாபெரும் பொருளாதார வேறுபாட்டால் பொதுவுடைமைப் பிறப்பிற்கான தேவை அச்சமூகத்திற்கு ஏற்பட்டது.

## அடக்குமுறை

உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் வாழும் மக்களின் மீது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடுதல் ஆதிக்க வர்க்கத்தினரிடம் காலம்காலமாக நடைமுறையில் இருந்து வரும் ஒன்று. அவ்வகையில் நியாயமான காரணத்துக்காக வேண்டி "தோல் ஷாப்பு முதலாளி ஒருவன் தாக்கப்பட்டால் முதலாளிகளின் ஏவல் நாய்களாக வளர்க்கப்படும் அடியாட்கள் தோல் ஷாப்புக்குள் புயலாகப் புகுவார்கள். பிறகு கண்மண் தெரியாமல் கையில் கிடைப்பவர்களையும் கண்ணில் தென்படுபவர்களையும் நையப் புடைப்பார்கள். என்னவென்று யாராலும் கேட்க முடியாது. சில சமயம் நகரப் போலீசும் வரவழைக்கப்பட்டுத் தடியடிக்கும் ஆளாக வேண்டிவரும். மிருகத்தை வசக்குவதுபோல், அடிமைகளான தோல்ஷாப்புக் கூலிகளைப் பீதியிலேயே முதலாளிகள் வைத்திருந்தனர். அடியும் உதையும் கொடுமையும் தோல்ஷாப்பில் மாமூல்" என்று உரிமைக்குக் குரல் கொடுப்பவர்கள் அடக்கப்படுதலை ஆசிரியர் காட்சிப்படுத்துகிறார் (Selvaraaj, 2013).

ஓராண்டுக்கு முறி எழுதிக் கொடுத்திருந்த அடிமைச் சாசனத்தைத் திருப்பிக் கேட்ட மம்முதன் என்ற தொழிலாளியிடம் "மாதச் சோத், ஒரு தபா எழுதிக் கொடுத்தா குடுத்தது தாண்டா. வெளியே போயிடுவிகளோ என் தோல்ஷாப்பை உட்டு, வேற ஷாப்புக்கு நீ போரதைப் பாப்பம்" என்றான் தோல் தொழிற்சாலை முதலாளியான அஸன்பாய். "வருஷமெல்லாம் எம் உழைப்பையும், என் ரெத்தத்தையும் உறிஞ்சது போதாதா. எங்கிட்டே எழுதி வாங்கிய ஒப்பந்தப் பத்திரம் கெடு முடிஞ்சி போயிட்டது. என் கைக்கு வரலேண்டா நல்லாருக்காது" என்று மறுமொழியாக மம்முதன் கூறியவுடன் "ஏய்! எகிறாதலே, அஸன் ராவுத்தனைப் பத்தி ஒனக்குத் தெரியாது (Selvaraaj, 2013). நீ இந்த ஷாப்பை உட்டுப் போவ மாட்டே, "லேய்" ஒம் பொணம் தான் போவும்" என்று அஸன் ராவுத்தரது மைத்துனனான முஸ்தபா மீரான் கூறுகிறான் (Selvaraaj, 2013). மறுவாரம், சுண்ணாம்பு நீத்துக் குழியோரம் மம்முதன் நாக்குத் தள்ளிச் செத்துக் கிடந்தான். பிணத்தைப்பற்றி விசாரணை செய்ய வந்த காவல்துறை, சுண்ணாம்பு நீத்துக் குழியில் கால் இடறி விழுந்து இறந்து போனதாக வழக்கை முடித்தது.

முதலாளிகளுக்கு ஆதரவாக அதிகாரிகள் நடந்து கொண்டதால் தொழிலாளர்கள் நீதிபரிபாலனம் நமக்கில்லை என்ற நிலையில் உரிமை இழந்திருந்தனர். வேலைத்தளங்களில் பெண்கள் பலரும் பாலியல் சீண்டலுக்கு ஆளாகினர். தட்டிக் கேட்போர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். வேலை பளு தாங்காமல் அங்கிருந்து தப்பிச் செல்வோரைப் பிடித்துக் கொண்டு வர பல அடியாட்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் மானாவாரியாக உடல் உழைப்பு உறிஞ்சப்பட்டு வெறும் சக்கைகளாக வாழ வேண்டியிருந்தது.

தோல் தொழிற்சாலைகளில் பணிபுரியக் கூடியவர்கள் ஏதேனும் தவறு இழைத்தால் அவர்களுக்குச் சாட்டையடியும் சவுக்கடியும் கொடுக்கப்பட்டன. "குற்றம் செய்த தோல்ஷாப்புத் தொழிலாளியைக் கல்தூணில் தொங்கப்போட்டு சாட்டை வாரினால் அடித்துக் காயப்படுத்துவது என்பது, அந்த ஊர் தோல்ஷாப்புகளில் ஏற்பட்டுள்ள சாதாரண நடைமுறை. சில சமயம் அடி தாளாமல், சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளி மரணமடைவதைப் போல், மரணத்தில் தொழிலாளி உயிர் ஒடுங்கிப் போவதும் உண்டு. தோல்ஷாப்புத் தொழிலாளர்களை எச்சரிக்கும் வகையில் ஒவ்வொரு தோல் ஷாப்பின் முகப்பிலும் அப்படிப்பட்ட கல் நாட்டப்பட்டு பராமரிக்கப்படும்" என்று தொழிலாளர்கள் அடித்து அச்சுறுத்தப்பட்ட அவலநிலையை ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார் (Selvaraaj, 2013). உரிமைகளைக் கேட்க முற்படுவோர் தனித்தனி ஆட்களாய் இருக்கையில் அடக்குமுறையால் அவர்கள் அழுத்தப்பட்டனர். தொழிலாளிகள் அடி உதைக்குப் பயந்தே உரிமைகளைப் பெற முயலாமல் அடிமை

வாழ்வு வாழ்ந்தனர். அம்மக்கள் மீண்டெழ முடியாத அளவு அடக்குமுறையால் அடிமைப்படுத்தப்பட்ட தன்மை இவற்றின் மூலம் காட்டப்படுகிறது.

## வறுமை

மனித வாழ்வில் வறுமை என்பது எத்தகைய இன்னல்களிலும் வாழப் பழகிக் கொள்ளும் மனோ நிலையை ஏற்படுத்துவது. இதனைப் பயன்படுத்தியே முதலாளிகள் தொழிலாளிகளின் உழைப்பைச் சுரண்டினர். தொழிலாளிகளது கடின உழைப்பால் அவர்களுக்குப் பயன் எதுவும் ஏற்படவில்லை. குழந்தைத் தொழிலாளர்களைப் பணியமர்த்தி அதன் மூலமும் மக்களை முதலாளிகள் வஞ்சித்தனர். சிறுவயதிலேயே அவர்கள் அடக்கு முறைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். ஆசிர் தனது மனைவி இறந்தபோது இறுதிச் சடங்கை நடத்துவதற்கு அஸன்ராவுத்தரிடம் உதவி கேட்டுச் சென்றான். அவனோடு சென்ற சிறுவனான அவனது மகன் ஓசேப்பை முறி எழுதிக் கொடுத்துப் பணியமர்த்தினால் இறுதிச்சடங்கிற்குப் பண உதவி செய்வதாகக் கூறுகிறான் அஸன் ராவுத்தர். வறுமையினால் பாலகனான ஓசேப்பு தோல் தொழிற்சாலைக்குச் செல்ல நேரிடுகிறது. ஓசேப்பின் பள்ளிக்கூட வாழ்க்கை கனவாகிப் போகிறது என ஆசிரியர் அம்மக்களின் வறுமை நிலையைச் சுட்டிச் செல்கிறார்.

காசுக்குச் சிரமப்படும் நாட்களில் முடிதள்ளும் பெண்கள் பாடம் செய்வதற்கு வரும் மாட்டுத் தோல்களிலும் ஆட்டுத் தோல்களிலும் ஒட்டிக் கொண்டிருக்கும் மீண்ட மாமிசத்தைச் சுரண்டி எடுத்து, உப்புச் சத்து நீங்கும் வரையில் நீரில் அலசி எடுத்து வந்து தோல் கறியையும், குச்சிக்கிழங்கு அவியலையும் சேர்த்துச் சமைத்து உண்பார்கள் என்று ஆசிரியர் கூறுவதிலிருந்து முதலாளி வர்க்கத்திற்கும் தொழிலாளி வர்க்கத்திற்கும் இருந்த பொருளாதார ஏற்றத் தாழ்வை விளங்கிக்கொள்ள முடிகிறது. கடின உழைப்பாளிகளாக இருந்தும் ஈட்டத்தின் பயனை அவர்கள் அடையவில்லை. முதலாளிகளால், அவர்களின் உழைப்புச் சுரண்டலால் தொழிலாளிகள் வயிறார உணவு கூட உண்ண முடியாத அவல நிலை அங்கு இருந்தமை ஆசிரியரால் பல இடங்களில் காட்டப்படுகிறது.

தோல் ஷாப்பு வேலைநிறுத்தம் காரணமாகப் பெரும்பாலான தோல் பதனிடும் குடும்பங்களில் பல நாட்களில் அடுப்புப் புகையவில்லை. அவர்கள் பிழைக்க வேறு வழி தெரியாதவர்களாகவும் சேமிப்பே செய்ய இயலாதவர்களாகவும் உறிஞ்சப்பட்டு இருந்தனர். வேலை நிறுத்தத்தின் போது "முதலில் தோல்ஷாப்பு முதலாளிகள் "இந்த சைத்தான்கள்" ஏதோ உணர்ச்சி வசப்பட்டு இருதயசாமியின் துர்போதனையைக் கேட்டு ஷாப்புக்கு வராமல் இருக்கிறார்கள். நாலு நாள் பட்டினி கிடந்து வயறு கடித்தால் தானாகவே சரணடைந்து விடுவார்கள் என்று தான் மனப்பால் குடித்தார்கள்" என்று ஆசிரியர் எழுதியிருப்பது வறுமையில், பட்டினியில் வாடி வதங்கும் நிலையிலேயே அவர்கள் இருந்தமையைக் காட்டுகிறது (Selvaraaj, 2013).

## போராட்டம்

தோல் புதினம் ஒரு சோசலிச எதார்த்தவாத புதினமாகப் புனைவாக்கம் செய்யப்பட்டது. ஒடுக்கப்பட்ட பாட்டாளி மக்கள் நற்தலைவர்களால் உணர்வு பெற்று, தொழிற்சங்கத்தின் வழி ஒன்றிணைந்து போராட்டங்களில் ஈடுபடுவதை, தங்களுக்கான உரிமைகளைப் பெறுவதைப் பற்றிப் பேசுவது.

புதினத்தின் தொடக்கம் சாதிய வேறுபாடு மற்றும் வர்க்கப் போராட்டம் ஆகியவற்றால் வேலைத்தளத்தில் பெண்கள் பலரும் தங்கள் மானத்தை இழந்து வாழ வேண்டிய நிலையைக் காட்டுகிறது. தொழிற்சாலையில் பலர் முன்னிலையில் சின்னக்கிளி என்ற சிறு பெண் தோல் தொழிற்சாலை முதலாளி அஸன்ராவுத்தரது மைத்துனன் முஸ்தபா மீரானால் வன்புணர்வுக்கு ஆளாகிக் குற்றுயிராய்க் கிடக்க, ஓசேப்பு அதற்குக் காரணமான அவனைத் தாக்குகின்றான். அடி உதைக்குப் பயந்த சக தொழிலாளர்கள் ஓசேப்பைத் தப்பிக்க வைக்க, அடியாட்களிடம் மாட்டிக்கொள்கிறான். கல் தூணில் கட்டி வைக்கப்பட்டு கசையடிக்கு ஆளாக்கப்படுகிறான். பாதிரியார் இருதயசாமி அவனைக் காப்பாற்றி அடிமைப்பட்ட மக்களுக்குள் எழுச்சியை விதைக்கிறார். தோல்

தொழிற்சாலைகளில் பணி புரிந்த பறையர் இனத்தவர்களும் நகரத் துப்புரவுத் தொழிலாளர்களான அருந்ததியர்களும் தங்கள் இழிநிலையைப் போக்க ஒன்றிணைகின்றனர்.

பொதுவுடைமைச் சிந்தனை வயப்பட்ட இடதுசாரித் தலைவர்கள், தேச விடுதலைக் காலத்தின்போதும், தேச விடுதலைக்குப் பிறகும், தலித் மக்களுடைய இயக்கத்தையும், தீண்டாமை ஒழிப்பு என்பதையும் சமூக விடுதலை மற்றும் வர்க்கப் போராட்டம் ஆகியவற்றின் பிரிக்க முடியாத அங்கமாகவே கருதி அவர்களை மேம்படுத்த பல்வேறு செயல்களை முன்னெடுத்து அம்மக்களோடு இரத்தமும் சதையுமாக இரண்டறக் கலந்து நின்று அம்மக்களின் விடுதலைக்காகப் போராடினர். அம்மக்களின் அடிமைத் தளைகளை உடைத்தெறிவதற்கான இயக்கத்தில் முன்னணியில் நின்றனர். இதனால் இப்புதினம் காட்டும் கதைமாந்தர்கள், அவலங்களையும் அவமானங்களையும் தலைவிதியே என்று ஏற்றுக்கொண்டு தெண்டனிட்டு அடிபணிந்து கிடப்பவர்களாக அல்லாமல் படிப்படியாக உணர்வு பெற்றுச் சனாதன சமூக விதியை மாற்றுபவர்களாகப் பரிணாமம் பெறுகின்றனர். தலைவர்களது வழிகாட்டுதலில் ஓசேப்பு, பாலியல் கொடுமையை எதிர்த்து நின்ற மாடத்தி, சிட்டம்மாள், சிறையில் அடக்குமுறைக்கு ஆட்பட்டு இறந்து போன அக்னிஸ்மேரி, தனது காதல் வாழ்க்கையைத் தியாகம் செய்த அருக்காணி, சாதிய அடக்குமுறைக்கு ஆட்பட்ட சுப்பவாடன் போன்றோரது போராட்ட குணம் அவர்களுக்கான, அவர்களது இனத்துக்கான விடிவு காலத்தை உருவாக்கியது. இப்புதினத்தில் பொதுவுடைமைச் சிந்தனையானது ஒடுக்குமுறையின் பல்வேறுபட்ட வடிவங்களையும், ஆதிக்க அதிகார சக்திகளின் நுட்பமான தந்திரங்களையும், பச்சையான சுயநலக் கூறுகளையும், அடையாளம் கண்டுகொள்ள துணையாகின்றது. போராட்ட முடிவில் சமுதாயத்தில் அடித்தட்டு வர்க்கத்தினனான ஓசேப்பு நகரசபைத் தலைவர் பதவியைப் பெறுகிறான். தோழர் வேலாயுதம் சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்று மக்கள் பணியாற்றத் தயாராகிறார். அரசியல் அதிகாரத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் அமரும் புரட்சிகரமான நிகழ்வு பொதுவுடைமைச் சிந்தனையால் அங்குச் சாத்தியமாகிறது.

“தொழிலாளர்கள் தமது வாழ்க்கைத் தேவைகளுக்காக முதலாளிகளையும் அதிகார வர்க்கத்தினரையும் இனியும் சார்ந்திருக்க மாட்டார்கள். இது தொழிலாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் இயக்கத்தின் இரகசியமாகும்” என்ற கூற்று இங்கு ஒப்பு நோக்கத்தக்கது (Sisubalan, 2009).

## தொழிற்சங்கத்தின் பங்கு

அடிமைப்பட்டு, உரிமை இழந்து விலங்குகள் போல வாழ்ந்து வரும் மக்கள் சமுதாயத்தை ஒன்றுதிரட்டி சமுதாயத்தில் மாபெரும் மாற்றங்களைப் புரியும் தன்னேரில்லாத தலைவர்கள் உலகெங்கும் காலம் தோறும் தோன்றி பல நன்மைகளைப் புரிந்து வருகின்றனர். அவ்வரிசையில் தோல் தொழிற்சாலைகளில் கொத்தடிமைகளாக நடத்தப்பட்ட மக்களும் முற்போக்குவாதியான சுந்தரேச ஐயரின் மகனான சங்கரன் தலைமையில் ஒன்றிணைகின்றனர்.

தேசியவாதியாகவும் தொழிற்சங்கவாதியாகவும் விளங்கிய நரசிம்ம பாரதி, காங்கிரஸ் சோஷலிஸ்டான வேலாயுதம், சட்டமன்ற உறுப்பினரான தோழர் கந்தசாமி, தொழிற்சங்கத் தலைவராக மாறிய சந்தனத்தேவன், கிறிஸ்துவப் பாதிரியார் இருதயசாமி, சகோதரர் தங்கசாமி, முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த சவுகத் அலி, சுயமரியாதை இயக்கத் தலைவர் வீரபத்திர நாடார் போன்றவர்களது முயற்சியால் மக்கள் ஒன்றுபட்டு தங்களுக்கான போராட்டத்தை, தொழிற்சங்கத்தின் மூலம் முனைப்புடன் நடத்துகின்றனர். இதனால் பல இன்னல்களை அவர்கள் சந்திக்க நேரிடுகிறது. சிறை செல்லுதல், தலைமறைவு வாழ்க்கை, தாக்கப்படுதல் எனப் பலவாறு துன்பப்படுகின்றனர். இருந்த போதும் அவர்களது உறுதி குலையவில்லை. தொடர் போராட்டங்களுக்குப் பிறகு அவர்களுக்கான உரிமைகள் மீட்டெடுக்கப்படுகின்றன. புதிய ஊதிய முறை, அதிகப்படியான ஈட்டத்தொகை, பஞ்சப்படி, வேலை நேரத்தை முறைப்படுத்துதல், போன்றவற்றை வழங்கக் கோரிய அவர்களது போராட்டம் இறுதியில் அர்த்தப்படுகிறது. “மார்க்சியம் என்பது வெறும் அரசியலோடு நிற்பதன்று. சமுதாய வாழ்வில் சகல கூறுகள் பற்றிய உண்மையை அறியவும், சரியான பாதையில் செல்லவும், வெளிச்சம் பாய்ச்சுகிற மகத்தான விஞ்ஞானம் ஆகும்” என்பது இதன் மூலம் உறுதிப்படுகிறது (Arunan, 1992).

 DOI: 10.34256/irjt22330

## முடிவுரை

தோல் புதினமானது, முதலாளிகளின் 'முறி' அடிமைகளாக இருந்த தொழிலாளர்களின் எழுச்சி மிக்க போராட்ட வாழ்வை விரிவாக உரைக்கிறது. பொதுவுடைமைச் சிந்தனையானது கொடூரமான முதலாளித்துவச் சுரண்டலுக்கும், மறுபக்கம் வர்ண தர்ம தீண்டாமை என்கிற நிலமானிய அமைப்பின் சமூகப் பொருளாதார பண்பாட்டு அடக்குமுறைக்கும் ஆளாகி அல்லலல்படும் மக்களது வாழ்க்கையில் மன அளவிலும் சமூக அளவிலும் மிகச் சிறந்த மாற்றத்தை உருவாக்கியதை இப்புதினம் காட்டுகிறது. தற்போது பல்வேறு மாற்றங்களுடன் தோல் தொழிற்சாலையில் தொழிலாளிகளின் பணி செம்மைப் படுத்தப்பட்டு அவர்களுக்கான உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. உலக வரலாற்றில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய பொதுவுடைமை இயக்கமும் அதனைப் போற்றி வளர்த்த இயக்கத்தினரும்தான் மாபெரும் இப்புரட்சிக்குக் காரணம் என்பதை இத்தகைய படைப்புகள் வாயிலாக உணர முடிகிறது. எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்; ஆண்டான் என்றும் அடிமை என்றும் எண்ணுகின்ற சிந்தனை மாற வேண்டும் என்ற பொதுவுடைமைச்சிந்தனை ஆசிரியரால் இப்புதினத்தில் விரிவாகப் பேசப்பட்டுள்ளமை இதனை உறுதிப்படுத்துகிறது.

## References


Agniputhiran, L.K., (2009) Varkkap Porattamum Manidaviyal Kotpaadugalum, Manivasagar Pathippagam, Chennai, India.

Arunan, (1992) Marxia Azhagiyal, Vasantham Pathippagam, Chennai, India.

Natarajan, T, K., (2009) Thiranaivu Kalai, New Century Book House, Chennai, India.

Selvaraaj, T., (2013) Thol, New Century Book House, Chennai, India.

Sisubalan, R., (2009) Socialism Mattrum Marxsiyam, New Century Book House, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License